காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்

MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி

8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmil.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS
Dr M. Rajkumar — 90410 25996
Dr K. Nanitha Bhaaaaaaal — 9444 288784
Dr Sathish Rajkumar — 9445 401793
Dr Shanthi R — 9884 650945
Dr Salma R — 87780 87742
Dr Praveena E — 9944 100443

தொகுதி - 6 | நாளிதழ் | 6 பக்கங்கள் சென்னை, 12 நவம்பர் 2026 ரூ.2/- இதழ் - 123

தூத்துக்குடி ஸ்டெர்லைட் போராட்டம்: கூடுதலாக தலா ரூ. 25 லட்சம் நிவாரணம் அறிவிப்பு!

தூத்துக்குடி – 12 நவம்பர், 2026

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை எதிர்ப்புப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் கோரிக்கையை ஏற்று அந்தக் குடும்பங்களுக்கு கூடுதல் நிவாரணமாக ரூ. 5.25 கோடி வழங்க முதல்வர் சி. ஜோசப் விஜய் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தூத்துக்குடி மாவட்டத்தில் 22.05.2018 மற்றும் 23.05.2018 ஆகிய நாள்களில் நடைபெற்ற ஸ்டெர்லைட் தாமிர உருக்காலை எதிர்ப்புப் போராட்டத்தின் போது உயிரிழந்த 13 நபர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ. 25 லட்சமும் மற்றும் கொடுங்காயமடைந்த 40 நபர்களுக்குத் தலா ரூ. 5 லட்சமும் நிவாரண நிதியாக ஏற்கெனவே வழங்கப்பட்டது.

இந்நிலையில், இந்தப் போராட்டத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் கூடுதல் நிவாரணம் வழங்கிடக் கோரி முதல்வரிடம் முறையிட்டதன்பேரில், அதனைக் கனிவுடன்



பரிசீலனை செய்து, நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணையத்தின் பரிந்துரையின்படி, இந்தப் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் 13 குடும்பங்களுக்கு வழங்கவேண்டிய தலா ரூ. 50 லட்சத்தில் ஏற்கனவே வழங்கிய ரூ. 25 இலட்சம் போக மீதமுள்ள தொகையான தலா ரூ. 25 லட்சம் வீதம் ரூ. 3.25 கோடியும், கொடுங்காயமடைந்த 40 நபர்களுக்கு வழங்கவேண்டிய தலா ரூ. 10 லட்சத்தில் ஏற்கனவே வழங்கிய ரூ. 5 லட்சம் போக மீதமுள்ள தொகையான தலா ரூ. 5 லட்சம் வீதம் ரூ.2 கோடியும் என மொத்தம் ரூ. 5.25 கோடி கூடுதல் நிவாரண நிதியாக வழங்க முதல்வர் சி. ஜோசப் விஜய் ஆணையிட்டுள்ளார் .

கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பேசுவதற்காக ஆட்சியைத் தரவில்லை! எடப்பாடி பழனிசாமி கருத்து

சென்னை – 12 நவம்பர், 2026

தீபாவளியில் கொலை நடந்தது பற்றி கேட்டால், இதற்கு முன்பு திமுக ஆட்சியில் நடந்த கொலைகளைப் பற்றி அமைச்சர் ராஜ்மோகன் பேசுகிறார், கடந்த காலத்தோடு ஒப்பிட்டுப் பேச ஆட்சியைத் தரவில்லை என்று அதிமுக பொதுச் செயலர் எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

சேலம் மாவட்டம் எடப்பாடியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது,

தமிழக வெற்றி கழகம் அமைந்த ஆறு மாதம் ஆகிறது ஏற்கனவே சட்டமன்றத்தில் பொதுப்பணித்துறை அமைச்சர் ஆதவ் அர்ஜுன் அவர்கள் ஆறு மாத காலத்தில் சிறப்பான ஆட்சித் தருவோம் என தெரிவித்து இருந்தார். ஆனால் சிறப்பான ஆட்சி தரவில்லை துயரமான ஆட்சியை தான் தந்திருக்கிறார். எங்கு பார்த்தாலும் கொலை நடக்கிறது கொலை நடக்காத நாளே இல்லை.

தமிழக வெற்றி கழகத்திற்கு ஆதரவு தருகின்ற இடது கம்யூனிஸ்ட் வலது கம்யூனிஸ்ட்கூட தமிழகத்தில் சட்டம் ஒழுங்கு சரியில்லை என அவர்களும் தெரிவித்து இருக்கிறார்கள்.

தீபாவளி அன்று 11 கொலைகள் நடந்துள்ளதாக பத்திரிகைகளில் செய்தி வந்துள்ளது. இது குறித்து கருத்து வெளியிட்ட பள்ளி கல்வித்துறை அமைச்சர் ராஜ்மோகன் அவர்கள் ஒரு கருத்தை தெரிவித்து இருக்கிறார்.

தீபாவளியில் கொலை நடந்ததா ? இதற்கு முன்பு திமுக ஆட்சியில் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு நடந்தது என்று கேள்வி எழுப்பியிருக்கிறார்.

இது அழகல்ல அரசு, எப்படிப்பட்ட சம்பவங்களை தடுத்து நிறுத்த வேண்டும். இதற்கு தான் உங்களுக்கு ஆட்சி கொடுத்திருக்கிறார்கள்.

தமிழக முதல் முதலமைச்சர் அவர்களது கட்சி எம்எல்ஏக்களை இன்று சந்திக்கிறார் என்பது குறித்து கேட்டதற்கு, அவர் பயிற்சி கொடுக்கிறாரா? அட்வைஸ் கொடுக்கிறா? ஊடகத்தினர்தான் தெரிந்து வெளிப்படுத்த வேண்டும் என்றார் எடப்பாடி பழனிசாமி.

இன்று தமிழகத்தை பொறுத்தவரை பற்றி கவலை இல்லை, சட்டம் - ஒழுங்கு சீர்கேடு பற்றி கவலை இல்லை, எந்த ஒரு புதிய திட்டமும் தமிழகத்தில் வரவில்லை, தமிழகத்தில் வளர்ச்சி திட்டம் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது.

பத்திரபதிவு அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு அலுவலகங்களில் சோதனை நடத்தப்படுகிறது. அங்கு பணம் சிக்குகிறது அப்படி என்றால் லஞ்சம் வாங்குகிறார்கள் என்று தானே அர்த்தம். இப்போது டிமாண்ட் பண்ணி கேட்கிறார்கள்,

தமிழகத்தின் முதலமைச்சரோ என் பெயரைச் சொன்னால் அதிகாரிகள் நடுங்குவார்கள் என்றார், இவர் பெயரை சொன்னால் அதிகமாக பணம் கேட்பதாக மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

லஞ்சமே இல்லை என்றால் எதற்கு லஞ்ச ஒழிப்புத்துறை சோதனை போடுகிறது.தீபாவளி அன்று கூட பல அலுவலகங்களில் சோதனை போடப்பட்டது. இந்த சோதனையில் பல்லாயிரக்கணக்கான ரூபாய் கண்டுபிடித்து சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப் பதிவு செய்திருக்கிறார்கள்.

விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பார்கள் ஒரு ஆட்சியின் சிறப்பு ஆறு மாத காலத்தில் தெரிந்து விடும். இந்த



ஆறு மாத காலத்தில் என்ன நடந்தது?

விதிகளை மீறும் தொழிற்சாலை மீது, நடவடிக்கை எடுக்கப்படும் என செய்தித் தாளில் வந்திருக்கிறது. கடந்த நான்கு மாதங்களில் 467 தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது என செய்தி வந்திருக்கிறது. மூடுவது சர்வசாதாரணம். ஆனால் திறக்கப்பட வேண்டும்.

மின்சாரத்தை துண்டிக்கிறீர்கள். இதனால் ஒன்றரை லட்சம் பேர் வேலை இழந்து இருக்கிறார்கள். அந்த குடும்பத்தை யார் காப்பாற்றுவது?

குறைகள் இருந்தால் இருந்தால் அமைச்சர் ஆய்வு செய்ய வேண்டும் குறிப்பிட்ட கால அவகாசம் கொடுத்து சரி செய்ய வேண்டும் என கூற வேண்டும்.

தொழிற்சாலைகள் மூடினால் அவர்கள் எப்படி கடனை திருப்பி செலுத்த முடியும். உற்பத்தி ஆனால்தானே அரசுக்கு வரி கிடைக்கும்.இதை பற்றி கவலை இல்லை. ஏதோ ஜாக்பாட்டில் ஆட்சி அமைந்து, அமைச்சர் ஆக்கிவிட்டார்கள். மக்களின் கஷ்டம் தெரியாது, நிறுவனத்தை நடத்துபவர்கள் பற்றியும் தெரியாது, எதுவும் தெரியாது.

திடீரென அமைச்சர் ஆனால் அப்படித்தான் இருக்கும், 467 தொழிற்சாலைகளைப் பார்த்து குறைபாடு இருந்தால் அவர்களுக்கு தெரிவித்து அவர்கள் சரி செய்து கொள்வார்கள், அதை விட்டுவிட்டு அதிகாரம் கிடைத்துவிட்டது, அதிகார போதையில் இருக்கிறது என்பதால், தொழிற்சாலைகளை மூடிவிட்டால் யார் தொழிற்சாலையை தொடங்குவார்கள்? இதனால்தான் மூன்று பெரிய நிறுவனங்கள் ஆந்திராவிற்கு சென்றுவிட்டது. பல்லாயிரக்கணக்கான வேலை கிடைக்காத நிலை ஏற்பட்டது. யார் தமிழகத்தில் புதிய தொழிற்சாலை தொடங்குவார்கள்? சென்றவுடன் சீல் வைக்கிறார்கள்? ஆயிரக்கணக்கான முதலீடு போட்டு யார் தொழிற்சாலை தொடங்குவார்கள்? அதனால் தான் சுணக்கமாக இருக்கிறது? இந்த ஆட்சி அமைந்த பிறகு எந்த தொழிற்சாலையும் வரவில்லை? இதனால் தான் புதிய தொழில் தமிழகத்திற்கு வரவில்லை. ஏற்கனவே புரிந்துணர்வு ஒப்பந்தம் போட்ட தொழிற்சாலையும் ஆந்திராவுக்கு சென்று விட்டது.

நான் தெரிவித்தால் அதற்கு ஆக்கபூர்வமான பதில் தெரிவிப்பதில்லை. ஏதோ பதில் தெரிவிக்க வேண்டும் என்று தெரிவிக்கிறார்கள். ஒரு அமைச்சர் என்றால் அவர்கள் துறையில் மக்களும் பாதிக்கப்பட கூடாது நிறுவனமும் பாதிக்கக் கூடாது, தொழிலாளர்கள் பாதிக்கக் கூடாது, அதேபோல மாசு கட்டுப்பாட்டு விதிகளை கடைப்பிடிக்க வழிமுறை செய்ய வேண்டும்.

நாங்கள் என்ன வேண்டுமானாலும் செய்வோம் என்று நினைக்கிறார்கள். இது மிகப் பெரிய தவறு, தமிழகத்தில் தொழிற்சாலைகள் புதியதாக வருவதற்கு இது ஒரு முட்டு கட்டையாக தான் இருக்கும் என்று அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேட்டி அளித்தார்.

பெரியார் அறிவுலக ஊழல்! ஒருவரைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லையா? உயர்நீதிமன்றம் காட்டம்!

சென்னை – 12 நவம்பர், 2026

பெரியார் அறிவுலக புத்தக கொள்முதல் முறைகேட்டில் தவறு செய்த ஒருவரைக்கூட இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லையா என்று சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளை கேள்வி எழுப்பியுள்ளது.

நூலகங்களுக்கு புத்தக கொள்முதல் தொடர்பான உத்தரவை முறைப்படி செயல்படுத்தவில்லை என்று கூறி, தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை செயலர் மீது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்கக்கோரி ராமசுப்பு என்பவர் உயர் நீதிமன்ற மதுரை கிளையில் வழக்குத் தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கை நேற்று விசாரணைக்கு எடுத்த நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன் மற்றும் சுமதி ஆகியோர் அடங்கிய அமர்வு, நூலகங்களுக்கு புத்தகங்களை வாங்க பரிந்துரைத்தது யார்? என்று கேள்வி எழுப்பியதோடு, அகல்விளக்கு பதிப்பகத்தின் வங்கிக் கணக்கை உடனே முடக்க உத்தரவிட்டனர்.

மேலும், இந்த விவகாரத்தில் குற்றவாளிகள் யார் எனத் தெரியாவிட்டாலும், இன்னும்



வழக்குப்பதிவு செய்யாதது ஏன்? என்றும் கேள்வி எழுப்பியிருந்தனர்.

இந்த நிலையில், தமிழக அரசு தரப்பில் இன்று ஆஜரான அரசு வழக்கறிஞர், 112 பேர் கொண்ட பரிந்துரைக் குழுவே புத்தகத்தை பரிந்துரைத்ததாகவும், வருகின்ற நவ. 16 ஆம் தேதிக்குள் வழக்குப்பதிவு செய்துவிடுவோம் என்றும் விளக்கம் அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பேசிய நீதிபதிகள், புத்தக கொள்முதல் விவகாரத்தில் பரிந்துரைக் குழுவையே குற்றம்சாட்டுவது ஏற்புடையது அல்ல. இதுவரை குற்றம் செய்த ஒருவரைக்கூட கண்டுபிடிக்க முடியவில்லையா? என்று கேள்வி எழுப்பினர்.

மேலும், புத்தகம் கொள்முதல் முறைகேடு விவகாரத்தில் அரசுத் தரப்பில் விரிவான அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டு வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தனர்.

Oasis Grace
Engineering Projects Pvt Ltd

Build Your Future With Us

RTN.DR.R.SATHYANARAYANAN, Director - Business Development
+91 9360136897 / +91 8148231942
No.15, North Mada Street, Srinagar Colony, Saidapet, Chennai-600015
www.oasisgrace.in | business@jmrgroup.org

டிசம்பர் மாதத்திற்கான அஞ்சலக ஓய்வூதிய குறைதீர்ப்பு முகாம் குறித்த அறிவிப்பு

சென்னை – 12 நவம்பர், 2026 டிசம்பர் 2026-க்கான அஞ்சலக ஓய்வூதிய குறைதீர்ப்பு முகாம் குறித்த அறிவிப்பை தமிழ்நாடு தலைமை அஞ்சல் அலுவலகம் வெளியிட்டுள்ளது.

இந்தக் குறைதீர்ப்பு முகாம் டிசம்பர் 4-ம் தேதி காலை 11.30 மணிக்கு தலைமை அஞ்சல் அலுவலகம், தமிழ்நாடு வட்டம், சென்னை-600002 என்ற முகவரில் நடைபெறவுள்ளது.

ஓய்வூதியம் அல்லது குடும்ப ஓய்வூதியம் தொடர்பான குறைகளுக்குத் தீர்வு காண ஓய்வூதியதாரர்கள் அல்லது குடும்ப உறுப்பினர்கள் தங்களது குறைகள் குறித்த மனுக்களைத் தபால் அல்லது bgt.tn@indiapost.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓய்வூதியம் தொடர்பான குறைகள் குறித்த விண்ணப்பங்கள் 2026 நவம்பர் 13, மாலை 5.45 மணிக்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் குறைதீர்ப்பு முகாமில் பங்கேற்கும் ஓய்வூதியதாரர்கள் தங்களது செயல்பாட்டில் உள்ள மின்னஞ்சல் முகவரி மற்றும் மொபைல் எண்களை மனுவில் முறையாகக் குறிப்பிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.


நீடித்த கட்டுமானத்திற்கான ஆதார வளமாகத் தொழில்துறை கழிவுகளைப் பயன்படுத்துவதற்கான தொழில்நுட்பம் குறித்த ஆய்வு

சென்னை – 12 நவம்பர், 2026 நீடித்த கட்டுமானத்திற்கான ஆதார வளங்களாகத் தொழில்துறை கழிவுகளைப் பயன்படுத்துவதற்கான தொழில்நுட்பம் குறித்து இந்தியா – நார்வே நாடுகள் ஆய்வு மேற்கொண்டுள்ளன. புதுதில்லியில் உள்ள இந்திய வாழ்விட மையத்தில் நேற்று (10.11.2026) நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது.

இந்திய அறிவியல், தொழில்துறை ஆராய்ச்சி குழுமம், நார்வே ஆராய்ச்சி குழுமம் ஆகியவை இணைந்து இந்தக் கலந்துரையாடல் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்தன. இந்த நிகழ்ச்சியில் தொழில்துறை நிறுவனங்கள், எஸ்ஐஎன்டிஇஎஃப், ஒழுங்குமுறை ஆணையம், சிமெண்ட் உற்பத்தி நிறுவனங்கள், கட்டுமானத் துறையைச் சேர்ந்த பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

இதில், நீடித்த கழிவு மேலாண்மை, வளங்களை மீட்டெடுப்பதற்கான கூட்டு முயற்சிகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது.

கடந்த மே மாதம் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட நார்வே பயணத்தின் போது அந்நாட்டுப் பிரதமர் ஜோனஸ் கார் ஸ்டோருடன் நடத்திய பேச்சு வார்த்தையின் போது இரு நாடுகளுக்கிடையேயான நட்புறவுகள் குறித்தும், உத்திசார் கூட்டு நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்பட்டது. சுழற்சி அடிப்படையிலான பொருளாதார வளர்ச்சி, தூய்மை தொழில்நுட்பம், மேம்பட்ட ஆராய்ச்சி ஆகியவற்றை மையமாகக் கொண்டு உத்திசார் நடவடிக்கைகளில் இரு நாடுகளும் இணைந்து செயல்படுவது குறித்து விவாதிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.



சென்னையில் தனது விற்பனை மையங்களை விரிவுபடுத்தும் DriveX – கொளத்தூரில் புதிய மையம் தொடக்கம் சென்னை, நவம்பர் 2026:



சென்னை – 12 நவம்பர், 2026 சென்னையில் தனது விற்பனை மையங்களை விரிவுபடுத்தும் DriveX – கொளத்தூரில் புதிய மையம் தொடக்கம் சென்னை, நவம்பர் 2026:

ஒழுங்கமைக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகன விற்பனைத் தளமான DriveX Mobility, சென்னையில் தனது விற்பனைச் சேவையை விரிவுபடுத்தும் வகையில், கொளத்தூர் சுப்ரமண்யா நகர், விநாயகபுரத்தில் புதிய விற்பனை மையத்தைத் தொடங்கியுள்ளது. இந்தப் புதிய மையத்தின் மூலம், தரம் உறுதி செய்யப்பட்ட பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனங்களை வாடிக்கையாளர்கள் எளிதில் வாங்குவதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும், தென்னிந்தியாவில் தனது விற்பனை வலையமைப்பை விரிவுபடுத்தும் நிறுவனத்தின் முயற்சியில் இது மற்றொரு முக்கிய மைல்கல்லாக அமைந்துள்ளது. இந்த மையத்தில் சான்றளிக்கப்பட்ட மற்றும் புதுப்பிக்கப்பட்ட பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனங்கள் விற்பனைக்கு கிடைக்கும். வாகனக் கடன் வசதி, உத்தரவாத ஆதரவு மற்றும் உரிமை மாற்றத்திற்கான உதவி உள்ளிட்ட ஒருங்கிணைந்த சேவைகளையும் வாடிக்கையாளர்கள் பெறலாம். DriveX தளத்தில் விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு வாகனமும் அதன் தரம் மற்றும் செயல்திறனை உறுதிப்படுத்தும் வகையில் 300-க்கும் மேற்பட்ட தரப் பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகிறது. இதன் மூலம் வாகனத்தின் நிலை, ஆவணங்கள் மற்றும் விற்பனைக்குப் பிந்தைய சேவைகள் குறித்த வாடிக்கையாளர்களின் கவலைகளுக்குத் தீர்வு காண்பதுடன், நம்பகமான கொள்முதல் அனுபவத்தையும் நிறுவனம் வழங்குகிறது.

இதுகுறித்து DriveX நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரி தேவேஷ் தபாரியா கூறுகையில், “சென்னை DriveX நிறுவனத்திற்கு முக்கியமான சந்தையாகும். கொளத்தூரில் புதிய விற்பனை மையத்தைத் தொடங்கியிருப்பது, தரமான பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனச் சேவைகளை அதிகமான வாடிக்கையாளர்களிடம் கொண்டு சேர்ப்பதற்கான எங்களது மற்றொரு முயற்சியாகும். தரம் உறுதி செய்யப்பட்ட வாகனங்கள், வெளிப்படையான நடைமுறைகள் மற்றும் ஒருங்கிணைந்த உரிமையாளர் சேவைகள் மூலம் எளிமையான மற்றும் நம்பகமான கொள்முதல் அனுபவத்தை வழங்குவதே எங்கள் நோக்கம்” என்றார்.

நேரடி விற்பனை மையங்களுடன், DriveX தனது டிஜிட்டல் தளத்தின் வாயிலாகவும் பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனங்களை வாங்கவும் விற்கவும் வசதி வழங்குகிறது. மேலும், DriveX Direct தளத்தின் மூலம் வாடிக்கையாளர்களுக்கு இடையிலான நேரடி வாகனப் பரிவர்த்தனைகளுக்கும் தேவையான வழிகாட்டுதல் மற்றும் பரிவர்த்தனை ஆதரவை வழங்குகிறது. கொளத்தூரில் புதிய மையம் தொடங்கப்பட்டுள்ளதன் மூலம், சென்னையில் தனது இருப்பை மேலும் வலுப்படுத்துவதுடன், பயன்படுத்தப்பட்ட இருசக்கர வாகனச் சந்தையில் நம்பிக்கை, வெளிப்படைத்தன்மை மற்றும் வாடிக்கையாளர் வசதியை மேம்படுத்துவதில் DriveX தொடர்ந்து கவனம் செலுத்துகிறது.

சென்னை பெருநகர காவல், சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் தலைமையில், வளசரவாக்கம் தனியார் பள்ளியில், சைபர் குற்றங்கள் தொடர்பாக விழிப்புணர்வு அளிக்கப்பட்டது



சென்னை – 12 நவம்பர், 2026 சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முனைவர் A.அமல்ராஜ் அவர்களின் உத்தரவுப்படி, மத்திய குற்றப்பிரிவு கூடுதல் காவல் ஆணையாளர், அவர்களின் அறிவுரையின்பேரில், சைபர் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளர் K.உஷாராணி தலைமையில் இன்று (11.11.2026) காலை சென்னை, வளசரவாக்கம், சௌத்ரி நகரிலுள்ள Our Angel Matriculation பள்ளியில் சைபர் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் மாணவிகளுக்கு, இன்ஸ்டாகிராம், முகநூல், X தளம், Snapchat மற்றும் வாட்சப் உள்ளிட்ட சமூக வலைதளங்களை பாதுகாப்பாக பயன்படுத்துவது குறித்தும், சைபர் ஸ்டாக்கிங் (இணையவழி பின்தொடர்தல்) ஃபிஷிங் (மோசடி இணைப்புகள் மூலம் தனிப்பட்ட தகவல்களை திருடுதல்), சைபர் புல்லிங் (இணையவழி துன்புறுத்தல்) பகுதிநேர வேலைவாய்ப்பு மோசடி, கடன் செயலி மோசடி, பரிசு மோசடி, கூரியர் மோசடி உள்ளிட்ட பல்வேறு சைபர் குற்றங்கள் மற்றும் இதரஇணையவழி மோசடிகள் குறித்தும் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

மேலும் மாணவிகள் பாஸ்வேர்டு, OTP, CVV எண், வங்கிக்கணக்கு எண், தனிப்பட்ட தகவல்கள், புகைப்படங்கள், வீடியோக்கள், வீடு மற்றும் பள்ளி முகவரி மற்றும் பிற முக்கிய விவரங்களை தேவையில்லாமல் சமூக வலைதளங்களிலோ, இணையத்திலோ யாருடனும் பகிராமல் பாதுகாப்புடன் கையாள்வது குறித்தும் அறிவுரைகள் மாணவிகளுக்கு வழங்கப்பட்டன.

மாணவிகள் சைபர் துன்புறுத்தல், மிரட்டல் அல்லது இணையவழி மோசடியை எதிர்கொண்டால் உடனடியாகப் பெற்றோர், ஆசிரியர்கள் அல்லது காவல்துறையினருக்குத் தகவல் தெரிவிக்குமாறும் அல்லது பெற்றோர்கள் உதவியுடன் சைபர் குற்ற உதவி எண் 1930-ஐ தொடர்புகொள்வது மற்றும் www.cybercrime.gov.in என்ற National Cyber Crime Reporting Portal மூலம் புகார் அளிப்பது குறித்தும் விளக்கப்பட்டது.

மேலும், இந்நிகழ்ச்சியில் மாணவிகளின் பங்கேற்பை ஊக்கப்படுத்தி பரிசுகள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியில் பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் உள்பட சுமார் 200 நபர்கள் கலந்து கொண்டனர்.

பாய் தூஜ் பண்டிகையையொட்டி நாட்டு மக்களுக்குப் பிரதமர் வாழ்த்து

சென்னை – 12 நவம்பர், 2026 பிரதமர் நரேந்திர மோடி பாய் தூஜ் பண்டிகை இன்று கொண்டாடப்படுவதையொட்டி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

இந்தப் புனித பண்டிகை சகோதர, சகோதரிகளுக்கிடையேயான ஆழமான அன்பு, பாசத்தின் அடையாளமாகத் திகழ்கிறது என்று பிரதமர் குறிப்பிட்டார். இந்தப் புனித நன்னாளில் அனைவரும் மகிழ்ச்சியுடனும் வளத்துடனும் வாழ வாழ்த்து தெரிவித்தார்.

சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் இதனைப் பதிவிட்டுள்ளார்.

Printed by R.SATHYANARAYANAN and published by R.SATHYANARAYANAN on behalf of R.SATHYANARAYANAN and printed at Chennai Offset Printers, No.191, 212, Khaja Khan Bhandar Street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.
Editor: R.SATHYANARAYANAN

பாண்ட்பஜார் நிறுவனத்தின் புதிய தலைமைச் செயல் அலுவலராக எஸ். சம்பத் குமார் நியமனம்

சென்னை – 12 நவம்பர், 2026

சென்னை: இந்தியாவின் தொழில்நுட்ப அடிப்படையிலான நிலையான வருவாய் முதலீட்டுத் தளமான பாண்ட்பஜார் (Bondbazaar), தனது நிறுவனத்தின் தலைமைச் செயல் அலுவலராக (CEO) எஸ். சம்பத் குமாரை நியமித்துள்ளதாக இன்று அறிவித்துள்ளது. நிறுவனத்தின் அடுத்தகட்ட வளர்ச்சிக்கு அவர் தலைமை தாங்கவுள்ளார். டிஜிட்டல் முதலீட்டுக் கட்டமைப்பை வலுப்படுத்துதல், விநியோக வலையமைப்பை விரிவுபடுத்துதல், இந்தியா முழுவதும் உள்ள சில்லறை முதலீட்டாளர்கள் நிலையான வருவாய் முதலீடுகளை எளிதில் மேற்கொள்ள வழிவகுத்தல் ஆகியவற்றில் அவர் முக்கியக் கவனம் செலுத்துவார்.

நிதிச் சேவைகள், வணிக மேம்பாடு, முதலீட்டுப் பொருள் உத்திகள் மற்றும் விநியோக மேலாண்மை ஆகிய துறைகளில் சம்பத் குமார் 25 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவம் பெற்றவர். இதற்கு முன்பு எச்.டி.எஃப்.சி செக்யூரிட்டீஸ் நிறுவனத்தில் விநியோகப் பிரிவின் தலைமை அலுவலராகப் பணியாற்றிய அவர், நிறுவனத்தின் விநியோக வலையமைப்பை விரிவுபடுத்தும் நோக்கில் பல்வேறு முதலீட்டுத் தயாரிப்புத் திட்டங்களை முன்னெடுத்தார். இதற்கு முன்பு ரிலையன்ஸ் கேப்பிட்டல் அசெட் மேனேஜ்மென்ட் நிறுவனத்தில் வணிக மேம்பாட்டுப் பிரிவின் தலைவராகப் பணியாற்றியதுடன், ஸ்பார்க் கேப்பிட்டல் நிறுவனத்துடனும் தொடர்பில் இருந்துள்ளார்.

இந்தியாவின் டிஜிட்டல் முதலீட்டுச் சூழல் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வரும் நிலையில், நிலையான வருவாய் முதலீட்டுச் சந்தையில் சில்லறை முதலீட்டாளர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்கான வாய்ப்புகளும் உருவாகி வருகின்றன. இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில், அரசு மற்றும் பெருநிறுவனங்கள் வெளியிடும் பத்திரங்களில் சில்லறை முதலீட்டாளர்கள் முதலீடு செய்யும் வசதியை பாண்ட்பஜார் தனது தொழில்நுட்ப அடிப்படையிலான தளத்தின் மூலம் வழங்குகிறது. வெளிப்படையான சந்தை சார்ந்த விலை நிர்ணயம், நிகழ்நேரத்தில் பத்திரங்களை வாங்கவும் விற்கவும் வசதி, தரகு கட்டணம் இல்லாத சேவை, வெறும் ரூ.100 முதல் முதலீடு செய்யும் வாய்ப்பு உள்ளிட்ட சிறப்பம்சங்கள் மூலம் நிலையான வருவாய் முதலீடுகளை எளிமையாக்கியுள்ளது.

தனது நியமனம் குறித்து எஸ். சம்பத் குமார் கூறியதாவது "பாண்ட்பஜார் நிறுவனத்தின் வளர்ச்சியில் முக்கியமானதொரு கட்டத்தில் அதன் குழுவில் இணைவதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்தியாவின் நிலையான வருவாய் முதலீட்டுச் சந்தையில் சில்லறை முதலீட்டாளர்களின் பங்களிப்பை அதிகரிப்பதற்குப் பெரும் வாய்ப்புகள் உள்ளன. இந்த வாய்ப்புகளை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதில் தொழில்நுட்பம் முக்கியப் பங்கு வகிக்கும். முதலீட்டுத் தளத்தை மேலும் வலுப்படுத்துதல், எங்களது சேவைகளின் அணுகலை விரிவுபடுத்துதல், இந்தியா முழுவதும் உள்ள முதலீட்டாளர்களுக்கு எளிமையான, வெளிப்படையான மற்றும் நம்பகமான முதலீட்டு அனுபவத்தை வழங்குதல் ஆகியவற்றில் எங்களது கவனம் இருக்கும்."

இந்த நியமனத்தின் மூலம், தனது தொழில்நுட்பத் தளத்தை மேலும் வலுப்படுத்துதல், டிஜிட்டல் முதலீட்டு அனுபவத்தை மேம்படுத்துதல் மற்றும் விநியோக வலையமைப்பை விரிவுபடுத்துதல் ஆகியவற்றில் பாண்ட்பஜார் கவனம் செலுத்தவுள்ளது. இதன் மூலம் இந்தியாவின் நிலையான வருவாய் முதலீட்டுச் சந்தையில் சில்லறை முதலீட்டாளர்களின் பங்களிப்பை மேலும் அதிகரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது.



ரோபோடிக் தொழில்நுட்பத்துடன் பக்கவாத மறுவாழ்வு சிகிச்சை: ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனை புதிய முயற்சி!

சென்னை – 12 நவம்பர், 2026

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுக்கான மறுவாழ்வு சிகிச்சையில், நவீன ரோபோடிக் மற்றும் நரம்புத் தூண்டுதல் தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தியுள்ளது ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனை.

இதன் மூலம், நோயாளிகளுக்கு பல்வேறு வகையான தொடர் பயிற்சிகள் மற்றும் எதிர்ப்பு திறன் அடிப்படையிலான பயிற்சிகளை ஒவ்வொரு நபரின் தேவைகளுக்கு ஏற்ப திட்டமிட்ட முறையில் வழங்கி, நோயாளிகள் மீண்டும் சுயமாக தங்கள் அன்றாட செயல்பாடுகளை தாங்களே செய்யும் வாய்ப்புகளை அதிகரிக்க முடியும்.

அறிமுகப்படுத்தப்பட்டுள்ள ரோபோடிக் தொழிநுட்பத்தில் முக்கியமான அமைப்புகளில் ஒன்று 'மல்டிலிம்ப் ஐசோகினெடிக்' ரோபோடிக் மறுவாழ்வு அமைப்பு ஆகும். இந்த அமைப்பு, கைகள் மற்றும் கால்கள் இரண்டிற்கும், முக்கிய மூட்டு பயிற்சிகள் உட்பட 20-க்கும் மேற்பட்ட பயிற்சி முறைகளை நோயாளிகள் மேற்கொள்ள உதவுகிறது. ஒவ்வொரு நோயாளியின் மறுவாழ்வுத் தேவைக்கு ஏற்ப மறுவாழ்வு குழுவின் உதவியோடு பயிற்சி முறை மற்றும் பயிற்சி அளவை மாற்றியமைக்க முடியும்.

இந்த ரோபோடிக் அமைப்பின் மூலம் அன்றாட வாழ்க்கைச் செயல்பாடுகளுக்கான பிரத்யேக பயிற்சிகளையும் மறுவாழ்வின் பல்வேறு கட்டங்களில் இருக்கும் நோயாளிகளுக்கு ஏற்ற வகையில் வழங்க முடியும்.



கை மற்றும் விரல் இயக்கங்களில் சிரமத்தை எதிர்கொள்பவர்களுக்காக, ரோபோடிக் கையுறைகளும் இந்த அமைப்பில் உள்ளன. அவற்றின் துணையுடன் கைகளைத் திறத்தல், மூடுதல் மற்றும் விரல் இயக்கப் பயிற்சிகளை நோயாளிகள் மேற்கொள்ளலாம். இந்த வசதி தொடர்ச்சியான கை இயக்கப் பயிற்சிகள் செய்வதை எளிதாக்குகிறது.

அனைத்து ரோபோடிக் மறுவாழ்வுத் தொழில்நுட்பங்களும் பிசியோதெரபி மற்றும் பிற மறுவாழ்வு சிகிச்சை நிபுணர்களின் பணிகளுக்கு உதவியாக அமைகிறது.

பக்கவாத சிகிச்சையில் மறுவாழ்வின் முக்கியத்துவம் குறித்து, ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனை பக்கவாத மருத்துவப் பிரிவின் மூத்த ஆலோசகர் டாக்டர் சிவராஜன் தண்டேஸ்வரன் கூறுகையில், "பக்கவாத சிகிச்சை என்பது ஆரம்பக்கட்ட மருத்துவ சேவையுடன் முடிவடைந்து விடுவதில்லை. அன்றாட வாழ்வை மேற்கொள்வதில் அவர்களுக்கு ஏற்படும் உடல் இயக்க சவால்களுக்கு தீர்வு அளிக்கும் மறுவாழ்வு பயிற்சிகளும் முக்கியம். இதற்கு தொடர்ச்சியான ஒருங்கிணைக்கப்பட்ட பிரத்யேக உடல் இயக்க பயிற்சிகள் தேவைப்படுகிறது. இதற்கு ரோபோடிக் மறுவாழ்வு அமைப்புகள் பெரிதும் உதவுகின்றன. இது நோயாளிகளுக்குத் தனிப்பட்ட மறுவாழ்வுத் திட்டங்களை வழங்க உதவுகிறது. இதன் மூலம் நோயாளிகள் உடல் இயக்கங்களை மீண்டும் பெற்று சுயசார்போடு வாழ முடிகிறது," என்றார்.

காவேரி மருத்துவமனை குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் நிர்வாக இயக்குனர் டாக்டர் அரவிந்தன் செல்வராஜ் கூறுகையில், "மருத்துவம் என்பது ஒரு உடல் உபாதைக்கு சிகிச்சையளிப்பதுடன் நின்றுவிடாமல், நோயாளிகள் குணமடையும் முழுப் பயணத்திலும் அவர்களுக்கு ஆதரவளிப்பதாக இருக்க வேண்டும். பக்கவாதம் ஒரு நபரின் இயக்கம், சுயசார்பு மற்றும் வாழ்க்கைத் தரத்தை வெகுவாக பாதிக்கலாம். ரோபோடிக் மறுவாழ்வு மற்றும் நரம்புத் தூண்டுதல் தொழில்நுட்பங்களைக் அறிமுகப்படுத்துவதன் மூலம், விரிவான பக்கவாத மறுவாழ்வு சேவைகளை வழங்க நாங்கள் முற்பட்டுள்ளோம். நோயாளிகள் குணமடையும் பயணத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அவர்களுக்கு ஆதரவளிக்க, மருத்துவ நிபுணத்துவம், தகுந்த தொழில்நுட்பம் மற்றும் பரிவான சேவை ஆகியவற்றை ஒன்றிணைப்பதே எங்கள் நோக்கமாகும்," என்றார்.

இந்தியா – இத்தாலி இடையே அறிவியல் ஆராய்ச்சி ஒத்துழைப்பு குறித்த பேச்சுவார்த்தை: மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்

சென்னை – 12 நவம்பர், 2026

மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், மூன்று நாள் அரசுமுறைப் பயணமாக இத்தாலி புறப்பட்டுச் சென்றுள்ளார். அவரது இந்தப் பயணத்தின்போது இரு நாடுகளுக்கிடையேயான அறிவியல், தொழில்நுட்பம், புத்தாக்கம் உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

ஜிதேந்திர சிங் தலைமையிலான இந்திய பிரதிநிதிகள் குழு, அந்நாட்டு விண்வெளி, ஆராய்ச்சி ஒத்துழைப்புத் துறை அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த உள்ளது.

அவரது இந்தப் பயணத்தின் ஒரு பகுதியாக ரோமில் நடைபெறவுள்ள இந்தியா – இத்தாலி அறிவியல், புத்தாக்க விவாத நிகழ்ச்சியிலும், ட்ரியஸ்டேவிஸில் உள்ள முன்னணி அறிவியல் ஆராய்ச்சி நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் நிகழ்ச்சியிலும் அமைச்சர் பங்கேற்கிறார்.

ரோமில் நாளை (12.11.2026) நடைபெறும் இரண்டாவது இந்தியா – இத்தாலி அறிவியல், தொழில்நுட்பம், புத்தாக்க கருத்தரங்கில் இரு நாடுகளைச் சேர்ந்த முன்னணி அறிவியல் நிறுவனங்கள், ஆராய்ச்சியாளர்கள், தொழில்முனைவு மையங்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் பங்கேற்க உள்ளனர்.

இத்தாலியில் பல்கலைக்கழகம், ஆராய்ச்சித் துறை அமைச்சர் அன்னா மரியா பெர்னினி, விண்வெளித் துறை அமைச்சர் அடோல்போ உர்சோ ஆகியோரைச் சந்தித்து பரஸ்பரம் இருதரப்பு ஒத்துழைப்பு குறித்து ஜிதேந்திர சிங் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

இதனையடுத்து நாளை மறுநாள் (13.11.2026) அன்று ட்ரைஸ்டே நகரில் உள்ள அப்துஷ் சலாம் சர்வதேச கோட்பாட்டு இயற்பியல் மையம், சர்வதேச மரபணு பொறியியல், உயிரி தொழில்நுட்ப மையம், எலக்ட்ரா சின்க்ரோட்ரான் வசதி மையத்தையும் அமைச்சர் பார்வையிடுகிறார்.

மௌலானா அபுல் கலாம் ஆசாத் பிறந்த தினத்தையொட்டி மக்களவைத் தலைவர் அவருக்கு மரியாதை செலுத்தினார்

சென்னை – 12 நவம்பர், 2026

மௌலானா அபுல் கலாம் ஆசாத் பிறந்த தினத்தையொட்டி நாடாளுமன்ற கட்டடத்தின் மைய மண்டபத்தில் உள்ள அவரது உருவப்படத்திற்கு மக்களவைத் தலைவர் ஓம் பிர்லா மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற விவகாரம், சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு, நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் உறுப்பினர்கள் ஆகியோரும் மௌலானா அபுல் கலாம் ஆசாதின் உருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள். மக்களவை செயலாளர் உத்பல் குமார் சிங், மாநிலங்களவை செயலாளர் பி சி மோடி ஆகியோரும் மௌலானா அபுல் கலாம் ஆசாத்திற்கு மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களுக்கு மக்களவைச் செயலகம் ஆங்கிலம், இந்தி ஆகிய மொழிகளில் தயாரித்திருந்த மௌலானா அபுல் கலாம் ஆசாத்தின் வாழ்க்கை வரலாறு குறித்த புத்தகம் வழங்கப்பட்டது.

இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்

PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE

ALL ONLINE SERVICES

8148231942 / 8144337349
11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026.

மின்சார வாகனங்கள்: இந்தியாவின் வாகன நிதியுதவித் துறைக்கான வளர்ந்து வரும் வாய்ப்பு

பிரேம்குமார் G, வணிகத் தலைவர் - வாகன நிதி, உஜ்ஜீவன் ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்

சென்னை – 12 நவம்பர், 2026 பல இந்தியர்களைப் பொருத்தவரை, இரு சக்கர வாகனம் வாங்குவது வெறும் வாழ்க்கை முறைத் தேர்வு அல்ல. அது அவர்கள் வேலைக்குச் செல்வது, ஒரு சிறு வணிகத்தை நடத்துவது, பொருட்களை விநியோகிப்பது அல்லது குடும்பப் பொறுப்புகளை நிர்வகிப்பது போன்ற அன்றாடச் செயல்பாடுகளைத் தீர்மானிக்கும் ஒரு நடைமுறைச் சார்ந்த முடிவாகும். இந்தியாவின் போக்குவரத்து சூழலில் மின்சார இரு சக்கர வாகனங்கள் அதிகம் தெரியத் தொடங்கியுள்ள நிலையில், நுகர்வோர் அவற்றை ஏற்கத் தயாரா என்பது மட்டும் இனி கேள்வியல்ல. இந்த மாற்றத்தை மலிவானதாக, நம்பகமானதாக மற்றும் நிலையானதாக மாற்றுவதற்கு நிதிச் சூழலமைப்பால் முடியுமா என்பதும் கேள்வியாக இருக்கிறது.

எரிபொருள் விலை நிச்சயமற்ற தன்மையிலிருந்து மாறும் போக்குவரத்துத் தேர்வுகள் வரை

இந்தியா இறக்குமதி செய்யப்படும் கச்சா எண்ணெயைச் சார்ந்திருப்பதால், சர்வதேச சந்தையில் ஏற்படும் கச்சா எண்ணெய் விலை மாற்றங்கள் நாட்டின் பொருளாதாரத்தைப் பாதிக்கின்றன. இதனால், பெட்ரோலில் இயங்கும் வாகனங்களைச் சார்ந்திருக்கும் குடும்பங்களுக்கும் வணிகங்களுக்கும், எரிபொருள் செலவின் நிலைத்தன்மை என்பது மிக முக்கியமான ஒன்றாக மாறுகிறது.

தினமும் பெட்ரோலில் இயங்கும் இருசக்கர வாகனத்தைப் பயன்படுத்தும் ஒருவரைப் பொறுத்தவரை, எரிபொருள் செலவு என்பது இறுதியில் தவிர்க்க முடியாத, மீண்டும் மீண்டும் ஏற்படும் ஒரு அன்றாடச் செலவாக இருக்கிறது. இத்தகைய சூழலில், பெட்ரோல் செலவுக்குப் பதிலாக மின்சாரச் செலவை ஏற்கும் வகையில், ஒரு மின்சார வாகனத்தைத் தேர்ந்தெடுப்பது ஒரு சிறந்த மாற்றாக அமையலாம்.

இந்தியாவின் மின்சார இரு சக்கர வாகனச் சந்தை படிப்படியாக மாறி வருவதைக் கவனிப்பது சுவாரஸ்யமானது. VAHAN தரவுகள் குறித்த EV ரிப்போர்ட்டரின் பகுப்பாய்வின்படி, குறைந்த வேக மின் இரு சக்கர வாகனங்களைத் தவிர்த்து, சுமார் 12.8 லட்சம் மின்சார இரு சக்கர வாகனங்கள் 2025 ஆம் காலண்டர் ஆண்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன; இது 2024 ஆம் ஆண்டை விட 11.4% அதிகரிப்பாகும். அந்த ஆண்டில் நடைபெற்ற மொத்த EV விற்பனையில் பாதிக்கும் மேற்பட்ட பங்கை மின்சார இரு சக்கர வாகனங்கள் கொண்டிருந்தன.

இந்த எண்ணிக்கைகள், சிறிய அளவிலான ஆரம்பகால பயனர்கள் குழுவைத் தாண்டி வளர்ந்த ஒரு சந்தையைச் சுட்டிக்காட்டுகின்றன. ஆயினும், ஒட்டுமொத்த இரு சக்கர வாகனச் சந்தையில் மின்சார இரு சக்கர வாகனங்களின் பங்கு இன்னும் ஒப்பீட்டளவில் சிறியதாகவே உள்ளது. வளர்ச்சியின் அடுத்த கட்டமானது, மின்சார வாகனம் (EV) தங்கள் அன்றாடத் தேவைகளுக்குப் பொருத்தமானது என்ற நம்பிக்கையை எதிர்பார்க்கும், விலை உணர்திறன் கொண்ட வாடிக்கையாளர்களைச் சென்றடைவதைப் பொறுத்தே அமையும். இங்கே விலை நிலவரம், வழங்கப்படும் சலுகைகள், வங்கிகள் வழங்கும் கடன்களின் வட்டி விகிதங்கள் – இவையெல்லாம் வாங்கும்போது எடுக்கும் முடிவுகளில் முக்கியமானதாக இருக்கின்றன.

EV துறையில் நிதியின் பங்கு

ஒரு மின்சார இரு சக்கர வாகனத்தின் மலிவுத்தன்மையை அதன் வாங்கும் விலையை மட்டும் கொண்டு தீர்மானிக்க முடியாது. வாங்குபவர்கள் முன்பணம், மாதாந்திர தவணைகள், மின்சாரச் செலவுகள், பராமரிப்பு, காப்பீடு மற்றும் பேட்டரி தொடர்பான சாத்தியமான செலவுகள் ஆகியவற்றை கருத்தில் கொள்ள வேண்டும். குறைந்த இயக்கச் செலவை உறுதியளிக்கும் ஒரு வாகனம், ஆரம்ப நிதி ரீதியான சுமை மிக அதிகமாக இருந்தால், அணுக முடியாததாகவே இருக்கக்கூடும்.

முழுத் தொகையையும் முன்பணமாக செலுத்த முடியாத வாடிக்கையாளர்களுக்கு மின்சார வாகனப் பயன்பாட்டை மேலும் அணுகக்கூடியதாக மாற்றுகின்ற வாகன நிதியுதவி, வாங்கும் செலவை பொருத்தமான திருப்பிச் செலுத்தும் காலத்திற்கு பரவலாக்குவதன் மூலம் இந்த இடைவெளியைக் குறைக்க உதவும். சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு, இது குடும்ப வரவுசெலவுத் திட்டமிடலுக்கு உதவியாக இருக்கும். சிறு வணிக உரிமையாளர்கள், டெலிவரி பங்காளர்கள் மற்றும் சுயதொழில் கடன் வாங்குபவர்களுக்கு, அவர்களின் வாழ்வாதாரத்தை ஆதரிக்கும் ஒரு வாகனத்திற்கான அணுகலை இது வழங்கும்.

அரசாங்கத்தின் கொள்கை மற்றும் மின்சார வாகன நிதி சூழலமைப்பு

இந்தியாவின் மின்சார வாகன (EV) சூழலமைப்பை உருவாக்குவதில் அரசு கொள்கை ஒரு முக்கிய பங்கு வகித்துள்ளது. செப்டம்பர் 2024-ல் அறிவிக்கப்பட்ட PM E-DRIVE திட்டம், தகுதியான மின்சார வாகனங்களை மானியங்கள்/தேவை ஊக்கத்தொகைகள் மூலம் ஏற்றுக்கொள்வதை ஆதரிக்கிறது, மேலும் சார்ஜிங் உள்கட்டமைப்பு மற்றும் உள்நாட்டு உற்பத்தியை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் உள்ளடக்கியுள்ளது. இத்தகைய நடவடிக்கைகள் தகுதியான வாடிக்கையாளர்களுக்கான பயனுள்ள கொள்முதல் செலவைக் குறைக்கலாம். இருப்பினும், ஊக்கத்தொகைகள் மலிவு சமன்பாட்டின் ஒரு பகுதி மட்டுமே. அவற்றின் கிடைக்கும் தன்மை, தொகைகள் மற்றும் தகுதி நிபந்தனைகள் மாறக்கூடும், எனவே வாங்குபவர்கள் முழுமையான உரிமைச் செலவை மதிப்பிடுவது முக்கியமானதாக இருக்கிறது.

கடன் வழங்குபவர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் வாகன விற்பனை நிலையங்களுக்கு இடையேயான கூட்டாண்மைகள் மூலம் புதுமைக்கான வாய்ப்புகளும் உள்ளன. எளிமைப்படுத்தப்பட்ட ஆவணங்கள், டிஜிட்டல் கடன் விண்ணப்பங்கள் மற்றும் வட்டி விகிதங்கள், கட்டணங்கள் மற்றும் திருப்பிச் செலுத்தும் கடமைகள் பற்றிய வெளிப்படையான விளக்கங்கள் ஆகியவை நிதிக் கிடைக்கும் தன்மையை மேம்படுத்துவதோடு, வாடிக்கையாளர்கள் தகவலறிந்த முடிவுகளை எடுக்க உதவும்.

பேட்டரி-ஒரு-சேவையாக (battery-as-a-service) மற்றும் கிடைக்குமிடங்களில் பேட்டரி பரிமாற்றம் (battery swapping) உள்ளிட்ட வளர்ந்து வரும் மாதிரிகள், உரிமைத்துவச் சமன்பாட்டை மேலும் மாற்றக்கூடும். பேட்டரி செலவுகளை வாகன கொள்முதல் விலையிலிருந்து பிரிப்பது ஆரம்பச் செலவைக் குறைக்கலாம். இருப்பினும், நிதி ஏற்பாடுகள் தொடர்ச்சியான பணம் செலுத்துதல்கள், சேவைப் பொறுப்புகள் மற்றும் உரிமை மற்றும் மறுவிற்பனை மதிப்பிற்கான தாக்கங்களைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.



வளர்ச்சிக்கு ஈடாக பொறுப்பான கடன் வழங்கல் அவசியம்.

விரிவடையும் மின்சார வாகன சந்தை கடன் வழங்குபவர்களுக்கு தனித்துவமான பரிசீலனைகளை முன்வைக்கிறது. பேட்டரி தொழில்நுட்பம், வாகன மாதிரிகள் மற்றும் உற்பத்தியாளர் ஆதரவு ஆகியவை மாறுபடும், அதேசமயம் மறுவிற்பனை மதிப்புகள் பேட்டரி ஆரோக்கியம், உத்தரவாதக் கவரேஜ், உதிரிப் பாகங்களின் கிடைக்கும் தன்மை மற்றும் சேவை வலையமைப்புகள் ஆகியவற்றை பொருத்ததாக இருக்கலாம்.

பொறுப்புள்ள கடன் வழங்குதல் சமமாக முக்கியமானதாக இருக்கிறது. ஒரு EV வாங்குவதற்கு முடிவெடுக்கும் முன்பு, வாடிக்கையாளர்கள் சார்ஜிங் செலவுகள், பேட்டரி தொடர்பான செலவுகள் மற்றும் கடன் திருப்பிச் செலுத்துதல் பற்றி புரிந்து கொள்ள வேண்டும். பொருத்தமான கடன் காலங்கள், வெளிப்படையான கடன் விதிமுறைகள் மற்றும் கடன் வாங்குபவர்களின் வருமானத்துடன் ஒத்துப்போகும் திருப்பிச் செலுத்தும் காலங்கள் ஆகியவை EV உரிமையாக்குவதை மேலும் நிர்வகிக்கக்கூடியதாக மாற்ற உதவும்.


கடன் வழங்குநர்கள் வாகன செயல்திறன், கடன் வாங்குபவர்களின் சுயவிவரங்கள் மற்றும் வளர்ந்து வரும் இரண்டாம் நிலை சந்தை ஆகியவற்றைப் பற்றி ஒரு சிறந்த புரிதலை வளர்த்துக் கொள்ள வேண்டும். இத்தகைய திறன்கள் கடன் வழங்கும் தரங்களை சமரசம் செய்யாமல், மேலும் தகவலறிந்த கடன் மதிப்பீடுகளை ஆதரிக்க முடியும்.

மின்சார வாகன நிதியுதவியின் அடுத்த கட்டத்தை உருவாக்குதல்

இந்தியாவின் மின்சார வாகனப் பயன்பாட்டு மாற்றம் என்பது, வாகனங்களின் இருப்பு மற்றும் அரசாங்க ஆதரவை மட்டும் சார்ந்திருக்காது; மாறாக, மின்சார வாகன உரிமையை நடைமுறைக்கு உகந்ததாகவும் கட்டுப்படியாகக்கூடியதாகவும் மாற்றும் வங்கிக் கடன்கள் போன்ற நிதியுதவிகளை வாடிக்கையாளர்கள் பெற முடியுமா என்பதையும் சார்ந்திருக்கும்.

வாகன நிதியளிப்பவர்களைப் பொறுத்தவரை, முன்னோக்கிச் செல்லும் வழியானது, பொருத்தமான நிதியளிப்பு தயாரிப்புகளை உருவாக்குதல், உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்களுடன் கூட்டாண்மைகளை வலுப்படுத்துதல், மற்றும் மொத்த உரிமைச் செலவு குறித்து வாடிக்கையாளர் விழிப்புணர்வை மேம்படுத்துதல் ஆகியவற்றில் அமைந்துள்ளது. இந்த முயற்சிகள் பொறுப்பான கடன் மதிப்பீடுகள், வெளிப்படையான கடன் விதிமுறைகள் மற்றும் மின்சார வாகன நிதியளிப்புடன் தொடர்புடைய அபாயங்களைப் பற்றிய ஒரு தெளிவான புரிதல் ஆகியவற்றால் ஆதரிக்கப்பட வேண்டும்.

இறுதியில், மின்சார வாகன நிதியளிப்பின் வெற்றியானது, மேலும் பலர் நம்பிக்கையுடன் மின்சார வாகன இயக்கத்திற்கு மாற முடியுமா, திருப்பிச் செலுத்துதல்களை வசதியாக நிர்வகிக்க முடியுமா, மற்றும் காலப்போக்கில் உரிமைத்துவ பலன்களை பெற முடியுமா என்பதன் மூலம் அளவிடப்படும். இந்த மாற்றத்தை மக்களின் அன்றாட வாழ்க்கையில் நடைமுறையாகவும் மலிவுச் செலவாகவும் மாற்றுவதில்தான் நிதியளிப்புத் துறையின் வாய்ப்பு அமைந்துள்ளது.



முன்னேறிவரும் நாட்டின் வலிமை, சக்தி ஆகியவற்றின் அடிப்படையை எடுத்துரைக்கும் சமஸ்கிருத நீதிமொழியைப் பிரதமர் பகிர்ந்துள்ளார்

சென்னை – 12 நவம்பர், 2026 முன்னேறிவரும் நாட்டின் வலிமையும், சக்தியும் தவம், மத சம்பிரதாயங்கள், அனைவரின் நலனுக்கான விருப்பம் ஆகியவற்றின் மீது கட்டமைக்கப்படுவதாக எடுத்துரைக்கும் சமஸ்கிருத நீதிமொழியைப் பிரதமர் நரேந்திர மோடி பகிர்ந்துள்ளார். இது குறித்து சமூக ஊடக எக்ஸ் தளத்தில் பிரதமர் எழுதியிருப்பதாவது: அனைவரது நலன் விரும்பும் ஞானமிக்க முனிவர்கள் முதலில் தவத்திலும், மத சம்பிரதாயங்களிலும் ஈடுபட்டனர். இந்த தவம், சம்பிரதாயங்கள் மூலம் தேசம், வலிமை, சக்தி ஆகியவை உருவாகியது. இது போன்று முன்னேறிவரும் நாட்டிற்கும், அதன் வலிமைக்கும் அனைத்து தேவர்களும் மரியாதை செலுத்துகின்றனர்.

MM கிளினிக்
அரசு மூத்த மருத்துவ அதிகாரி
காலை 10 மணி முதல் மதியம் 2 மணி வரை - முதல் முறை இந்த நோட்டீசை கொண்டுவருபவர்களுக்கு சிகிச்சை இலவசம்
8668018731
அழகிரி நகர் மெயின் ரோடு, வடபழனி, சென்னை - 26.

சிக்னலை மதியுங்கள் - சாலை விதிகளைப் பின்பற்றுங்கள்.
சாலை பாதுகாப்பு
ஹலோ மிரர் மெட்ராஸ் - பாதுகாப்பாகச் செல்லுங்கள்

சுகாதாரப் பணியாளர்களின் தற்காலிக பதிவுக்கான விரிவான ஒழுங்குமுறை கட்டமைப்பு முன்மொழியப்பட்டுள்ளது

சென்னை – 12 நவம்பர், 2026 இந்தியாவின் சுகாதாரப் பணியாளர்களின் செயல்பாடுகளை வலுப்படுத்தும் நோக்கில் மத்திய சுகாதாரம், குடும்ப நல அமைச்சகத்தின் கீழ் உள்ள தேசிய இணை மற்றும் சுகாதாரப் பணி ஆணையம் தகுதியுடைய இணை, சுகாதாரப் பணியாளர்களின் தற்காலிக பதிவுக்கான விரிவான ஒழுங்குமுறை கட்டமைப்பை முன்மொழிந்துள்ளது. இதில் திறன் மேம்பாடு, தகுதி மதிப்பீடு, வழக்கமான பதிவிற்கு மாறுதல் ஆகியவை தொடர்பாக தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன.

இந்த முன்மொழியப்பட்ட கட்டமைப்பு பணியாளர்களின் பதிவில் சிறந்த சீரான தன்மை, வெளிப்படைத்தன்மை, பொறுப்புடமை ஆகியவற்றை கொண்டு வருவதை நோக்கமாக கொண்டுள்ளது அதே வேளையில் தகுதியுடைய பயிற்சி பெறுவோர் பரிந்துரைக்கப்பட்ட தர நிலைகளுக்கு உகந்த வகையில் தங்களுடைய தகுதிகளையும், திறன்களையும் மேம்படுத்திக்கொள்ள கட்டமைக்கப்பட்ட வாய்ப்புகளை உருவாக்குகிறது.

இதையடுத்து தேசிய இணை, சுகாதாரப் பணி ஆணையச் சட்டம் 2021-ன் கீழ் உருவாக்கப்பட்ட இணை, சுகாதார பணியாளர்களின் தற்காலிக பதிவுக்கான வரைவு ஒழுங்குமுறைகள் 2026 தொடர்பாக பொதுமக்களும் சம்பந்தப்பட்டவர்களும் கருத்து தெரிவிக்குமாறு தேசிய இணை சுகாதாரப் பணி ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.

தற்காலிக பதிவு செய்யப்பட்ட பணியாளர்கள், வழக்கமான பதிவுக்கான தேவைகளுக்காக திறன் மேம்பாட்டுக்கான பரிந்துரைக்கப்பட்ட இணைப்பு படிப்புகள், மேற்பார்வையிடப்பட்ட மருத்துவப் பயிற்சி, தேவைப்படும் குறைந்தபட்ச தகுதித் தேர்வுகள் ஆகியவற்றை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளையும் இந்த ஒழுங்குமுறைகள் அளிக்கின்றன.

6 ஆண்டுகளை நிறைவு செய்த போதைப்பொருள் இல்லாத இந்தியா இயக்கம்: விழிப்புணர்விலிருந்து மக்கள் இயக்கம் வரை

சென்னை – 12 நவம்பர், 2026 நாட்டில் போதைப்பொருளை சார்ந்திருப்பதை முற்றிலும் ஒழிக்கும் நோக்கத்துடன் தொடங்கப்பட்ட போதைப்பொருள் இல்லாத இந்தியா இயக்கம் ஆறு ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. கடந்த 2020 ஆகஸ்ட் 15 அன்று தொடங்கப்பட்ட இந்த இயக்கம், நாட்டின் அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டு மிகப்பெரிய மக்கள் இயக்கமாக உருவெடுத்துள்ளது. இந்த விழிப்புணர்வு இயக்கம் இதுவரை 35 கோடியே 84 லட்சத்திற்கும் அதிகமான மக்களை சென்றடைந்துள்ளது. இதில் 14 கோடியே 33 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களும், 11 கோடியே 32 லட்சத்திற்கும் அதிகமான பெண்களும் அடங்குவர். கல்வி நிறுவனங்கள் மூலமாக லட்சக்கணக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு சமுதாயத்தில் பெரும் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 47-வது பிரிவு, மருத்துவத் தேவைகளைத் தவிர உடல்நலத்திற்குத் தீங்கு விளைவிக்கும் போதைப்பொருட்களை சார்ந்திருப்பதை தடை செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. இதன் அடிப்படையில், மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், தேசிய போதைப்பொருள் தடுப்புத் திட்டத்தின் கீழ் இந்த விழிப்புணர்வு இயக்கத்தைச் செயல்படுத்தி வருகிறது. தொடக்க காலத்தில் போதைப்பொருள் பயன்பாடு அதிகம் உள்ள மாவட்டங்களில் மட்டும் செயல்படுத்தப்பட்ட இந்தத் திட்டம், படிப்படியாக விரிவுபடுத்தப்பட்டு நாடு முழுவதும் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கைகளை மேலும் வலுப்படுத்த மூன்று அடுக்கு கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்புச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி மாநில அளவில் தலைமைச் செயலாளர் தலைமையில் கண்காணிப்புக் குழுவும், மாவட்ட அளவில் ஆட்சியர் தலைமையில் போதைப்பொருளை சார்ந்திருப்பதை குறைப்பதற்கான குழுவும், வட்டார அளவில் வளர்ச்சி அலுவலர் தலைமையில் குழுவும் அமைக்கப்பட்டுத் தீவிரக் கண்காணிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், தேசிய அளவில் ஆன்மிக மற்றும் சமூகம் சார்ந்த அமைப்புகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டு அவற்றின் மூலமாகவும் போதைப்பொருள் விழிப்புணர்வு பரப்புரைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இதன் மூலம் லட்சக்கணக்கான மக்கள் பயனடைந்துள்ளனர்.

போதைப்பொருளுக்கு அடிமையாகும் நபர்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக நாடு முழுவதும் பல்வேறு சிறப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒருங்கிணைந்த மறுவாழ்வு மையங்கள், மாவட்ட போதைப்பொருள் மீட்பு மையங்கள், மருத்துவமனைகளில் உள்ள போதை மீட்புப் பிரிவுகள் ஆகியவை மூலமாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு முறையான சிகிச்சைகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டு வருகின்றன. கடந்த சில ஆண்டுகளில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை கணிசமாக அதிகரித்துள்ளது. குறிப்பாக, கடந்த காலகட்டங்களில் லட்சக்கணக்கான மக்கள் சிகிச்சை பெற்று இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியுள்ளனர்.

போதைக்கு அடிமையாகும் நபர்களைக் கண்டறிந்து அவர்களுக்கு உரிய மருத்துவ உதவி வழங்குவதோடு, அவர்கள் மீண்டும் சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டு வருகிறது.

இளைஞர்களைப் போதைப்பொருளை சார்ந்திருப்பதிலிருந்து மீட்கும் வகையில் கல்வி நிறுவனங்களில் சிறப்புப் பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. தேசிய அளவிலான கட்டணமில்லா உதவி எண்களும் இயக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்களின் சந்தேகங்களைத் தீர்க்கவும், பாதிக்கப்பட்ட நபர்கள் தேவையான உதவிகளைப் பெறவும் இந்த உதவி எண்கள் வழிவகை செய்கின்றன. ஜம்மு காஷ்மீர் உள்ளிட்ட சில மாநிலங்களில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் பெரும் வெற்றியைப் பெற்றுள்ளன. இந்த இயக்கத்தின் அடுத்த கட்டமாக, மாவட்ட அளவிலான புதிய புள்ளிவிவரக் கணக்கெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2029-ம் ஆண்டுக்குள் போதைப்பொருள் வர்த்தகத்தை முழுமையாக ஒழித்து, வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதற்கு இந்த இயக்கம் ஒரு முக்கிய அடித்தளமாக விளங்கும்.

குறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதியத்தை நீட்டிக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

சென்னை – 12 நவம்பர், 2026 குறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதியத்தை 2031-ம் ஆண்டு மார்ச் 31 வரை ஐந்து ஆண்டுகளுக்கு நீட்டிக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் தேசிய கடன் உத்தரவாத அறக்கட்டளை நிறுவனம் மூலம் கடன் அளிக்கும் நிறுவனங்களுக்கு வாராக்கடன் அபாயத்திற்கு எதிரான உத்திரவாத்தை அளிக்கிறது.

பிரதமரின் முத்ரா திட்டம் தொடங்கப்பட்டது முதல் 2026 செப்டம்பர் வரை கடன் வழங்கும் நிறுவனங்கள் மூலம் ரூ.60.36 கோடிக்கும் அதிகமான கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றின் மதிப்பு ரூ.43.34 லட்சம் கோடி ஆகும். 2016 ஜனவரியில் தொடங்கப்பட்ட குறு நிறுவனங்களுக்கான கடன் உத்தரவாத நிதியம் பிரதமரின் முத்ரா திட்டக் கடன்களின் வளர்ச்சியை ஊக்குவிப்பதில் முக்கிய காரணியாக உள்ளது.

இத்திட்டத்தின் கீழ் தகுதியுடைய குறு நிறுவனங்களுக்கு ரூ.20 லட்சம் வரை கடன்கள் வழங்கப்படுகிறது. பிரதமரின் ஜன்தன் கணக்குகளின் கீழ் வங்கியால் அளிக்கப்படும் ரூ.10,000 வரையிலான கூடுதல் கடன் வசதி, சுய உதவிக்குழுக்களுக்கு ரூ.10 லட்சம் முதல் ரூ.20 லட்சம் வரையிலான கடன் வசதி அளிக்கப்படும். கடன் வழங்கும் நிறுவனங்களின் உரிய அபாய அளவை பிரதிபலிக்கும் வகையில் செயல்பாட்டு மூலதன வரம்புகளுக்கு அளிக்கப்பட்ட தொகையுடனும், காலக் கடன்களுக்கு நிலுவையில் உள்ள தொகைகளுடனும் இந்த உத்தரவாத பாதுகாப்பு இணைக்கப்பட்டுள்ளது.

உத்தரவாத கட்டணம் ஆண்டுக்கு 1 சதவீதத்திலிருந்து 0.75 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. சுய உதவிக்குழுக்களுக்கு எந்த மாற்றமும் கிடையாது. இத்திட்டம் 16-வது நிதிக்குழு செயல்பாட்டில் இருக்கும்போது அதாவது நிதியாண்டு 2026-27 முதல் 2030-31 வரை பிரதமரின் முத்ரா திட்டத்தின் கீழ் வழங்கப்படும் அனைத்து கடன்களுக்கும் பொருந்தக்கூடியதாகும்.

குறு, சிறு, நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள், விவசாயிகள் ஆகியோருக்கு வங்கிகள் ஆதரவு அளிக்க வேண்டும்: குடியரசு துணைத்தலைவர்

சென்னை – 12 நவம்பர், 2026 தூத்துக்குடியில் நடைபெற்ற தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் 105-வது நிறுவன தின கொண்டாட்டங்களில் குடியரசு துணைத்தலைவர் சி பி ராதாகிருஷ்ணன் இன்று கலந்து கொண்டார். அப்போது பேசிய அவர், வரும் ஆண்டுகளில் இந்தியாவின் முன்னணி தனியார் துறை வங்கிகளில் ஒன்றாக திகழ வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

வங்கியின் 105 ஆண்டு கால குறிப்பிடத்தக்க பயணத்திற்கு குடியரசு துணைத்தலைவர் வாழ்த்து தெரிவித்தார். 1921-ம் ஆண்டு நாடார் வங்கி நிறுவனம் என்ற பெயரில் தொடங்கப்பட்டதை நினைவுகூர்ந்த அவர் நாட்டின் வங்கித்துறைக்கு அந்த வங்கி ஆற்றிய பங்களிப்பை பாராட்டினார். எளிமையாகத் தொடங்கப்பட்ட இந்த வங்கி 17 மாநிலங்கள், 4 யூனியன் பிரதேசங்களில் 632 கிளைகளுடன் முக்கிய வங்கியாக வளர்ச்சியடைந்துள்ளதாக கூறினார். தற்போது இந்த வங்கி 53 லட்சத்திற்கும் மேலான வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதுடன் ரூ.1.30 லட்சம் கோடிக்கும் அதிகமான அளவிற்கு வணிகம் செய்துள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டை கட்டமைப்பதில் வங்கிகளின் முக்கிய பங்களிப்பு குறித்து சுட்டிக்காட்டிய அவர், பொறுப்புமிக்க கடன் அளித்தல், குறு, சிறு, நடுத்தர தொழில்துறை நிறுவனங்கள், விவசாயிகள், சிறு வணிகர்கள், தொழில்முனைவோர்கள், மகளிர் தலைமையிலான நிறுவனங்கள், பெருநிறுவனங்கள் ஆகியவற்றுக்கு நிதி ஆதரவை அளிப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

இந்தியாவின் குறிப்பிடத்தக்க பொருளாதார முன்னேற்றம் குறித்து பேசிய குடியரசு துணைத்தலைவர் 2047-ல் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை அடைவதில் வங்கித்துறை முக்கியப் பங்கு வகிப்பதாக கூறினார். டிஜிட்டல் வங்கி, யுபிஐ மூலம் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் குறித்தும் நிதி உள்ளடக்கம் விரிவடைந்ததன் காரணமாக பெருமளவிலான மக்கள் முறையான வங்கிச்சேவைகளை பெற முடிவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கியின் செயல்பாடு, தொழில்நுட்ப முன்னேற்றங்கள் ஆகியவற்றை பாராட்டிய அவர் இணைய பாதுகாப்பை தொடர்ந்து வலுப்படுத்தவும், வாடிக்கையாளர்களின் பணம், தனிப்பட்ட தரவுகளை பாதுகாக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை ஊக்குவிக்கவும் அறிவுறுத்தினார்.

RS Polyclinic
OUR ESTEEMED DOCTORS

Dr M. Rajkumar
MBBS MS DNB MCH (vascular) — Sr Vascular Surgeon
98410 25996

Dr K. Namitha Bhuvaneswari
MS (Opthal) DO MBA — Sr Eye Surgeon
9444 288784

Dr Sathish Rajkumar
MBBS MS FMAS — Laparoscopic & Laser Surgeon
9445 401793

Dr Shanthi R
MBBS MS MCH (vascular) — Sr Vascular Surgeon
9884 650945

Dr Salins R
MBBS MD — General Physician
87780 87742

Dr Praveena E
MBBS MS (ENT) — Sr ENT Surgeon
9944 100443

புதுதில்லியில் யுகே யுகீன் பாரத் அருங்காட்சியகம் அமைக்க மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல்

தில்லி – 12 நவம்பர், 2026 புதுதில்லி வடக்கு மற்றும் தெற்கு வளாகத்தில் யுகே யுகீன் பாரத் அருங்காட்சியகம் அமைக்க பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இந்த அருங்காட்சியகம் அமைக்க ரூ.3,230 கோடி செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவின் நாகரீக பாரம்பரியம், பன்முகத்தன்மை, வளம், கலாச்சார மரபுகளை வெளிப்படுத்தும் வகையில் இந்த அருங்காட்சியகம் அமைக்கப்பட உள்ளது. வரலாற்றுச் சிறப்புமிக்க வடக்கு மற்றும் தெற்கு வளாகப் பகுதிகளின் தனித்துவமிக்க கட்டடக் கலையையும், பாரம்பரியமிக்க முக்கியத்துவத்தையும் சிதைக்காமல் மக்களுக்கான கலாச்சார மையமாக மாற்றும் வகையில் இந்த அருங்காட்சியகம் வடிவமைக்கப்பட உள்ளது.

1,78,509 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட உள்ள இந்த அருங்காட்சியகம் சிறந்த அனுபவத்தை வழங்கும் தொழில்நுட்பங்கள், பார்வையாளர்களை மையமாகக் கொண்ட செயல்விளக்க நடைமுறைகளுடன் ஒருங்கிணைக்கப்பட உள்ளது. சர்வதேச அளவில் புகழ்பெற்ற முக்கிய அருங்காட்சியகங்களுக்கு இணையாக இந்த யுகே யுகீன் பாரத் அருங்காட்சியகம் உருவாக்கப்பட உள்ளது. இது உலகின் மிகப்பெரிய காட்சியகத்தைக் கொண்ட அருங்காட்சியகமாகத் திகழும்.

இந்த அருங்காட்சியகம் இந்தியாவின் நாகரீகம் குறித்த கருப்பொருளுடன் கூடிய காட்சியகங்கள், கண்காட்சிகள், பல்வேறு கலாச்சார மரபுகள், அறிவுசார் அமைப்புகள், கலை, பண்பாட்டு நடைமுறைகள், பாரம்பரியம் குறித்த விளக்கங்களை எடுத்துரைக்கும் வகையில் அமைக்கப்படும்.

இந்த அருங்காட்சியம் அமைக்கும் திட்டத்தில் காட்சியகங்களை உருவாக்குதல், பல்வேறு கலைப்பொருட்களைப் பாதுகாப்பதற்கான வசதிகள், பார்வையாளர்களுக்கான அடிப்படை வசதிகள், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு, சிறந்த அனுபவங்களை வழங்கும் அம்சங்கள், சுற்றுச்சூழல் வடிவமைப்பு, நவீன கட்டிட மேலாண்மை அமைப்புகள், அதனுடன் தொடர்புடைய உள்கட்டமைப்பு வசதிகள் ஆகியவை அடங்கும்.

திட்டமிடல், பாரம்பரிய பாதுகாப்பு, கண்காட்சி வடிவமைப்பு, நீடித்த கலாச்சார மேலாண்மை போன்ற அம்சங்களில் சர்வதேச அளவில் சிறந்த நடைமுறைகளைப் பின்பற்றி நாட்டின் பன்முகத்தன்மை கொண்ட கலாச்சார சூழலுக்கு ஏற்ப இந்த அருங்காட்சியகம் உருவாக்கப்படுகிறது.

ஸ்டாண்ட்-அப் இந்தியா திட்டத்தைத் தொடர்வதற்கும் ரூ.4,111 கோடி மதிப்பிலான கடன் உத்தரவாத நிதியத்திற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல்

சென்னை – 12 நவம்பர், 2026 ஸ்டாண்ட்-அப் இந்தியா திட்டத்தை அடுத்த ஐந்து ஆண்டு காலத்திற்கு (31.03.2031 வரை) தொடர்வதற்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழு இன்று ஒப்புதல் வழங்கியது. இந்தத் திட்டம் பெண்கள், பட்டியலின வகுப்பினர், பழங்குடியின மக்கள் தொழில் முனைவோராக உருவெடுக்க ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ், அடுத்த ஐந்து ஆண்டுகளில் கூடுதலாக இரண்டரை லட்சம் தொழில் முனைவோருக்கு நிதியுதவி வழங்குவதை இலக்காகக் கொண்டு செயல்படுத்தப்பட உள்ளது. கடந்த 2016-ம் ஆண்டு ஏப்ரல் மாத்தில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து இது வரை 2,75,000-க்கும் அதிகமான பெண்கள், பட்டியலின, பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு கடனுதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் கீழ் கடன் உத்தரவாத நிதியத்திற்கு ரூ.4,111 கோடி ஒதுக்கீடு செய்வதற்கும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

புதிய தொழில் நிறுவனங்களைத் தொடங்க விரும்பும் பெண்கள், பட்டியலின, பழங்குடியின வகுப்பைச் சேர்ந்த தொழில் முனைவோர்களுக்கு உதவித் தொகையாக ரூ.10 லட்சம் முதல் ரூ.1 கோடி வரை கூட்டுக் கடன் அல்லது கால முறை கடனாக நிதியுதவி பெற இந்தத் திட்டம் வகை செய்கிறது. திட்டச் செலவில் 85 சதவீதம் வரை கடன் தொகை பெற முடியும்.

உற்பத்தி, சேவை, வர்த்தகம், விவசாயம் சார்ந்த தொழில்கள் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெற தகுதியுடையவையாகும். இந்தக் கடன் தொகைக்கு உத்தரவாதத் தொகையாக 0.5 சதவீதம் செலுத்த வேண்டும். இந்தத் திட்டம் பின்தங்கிய சமூகங்களில் தொழில் முனைவோர்களை வலுப்படுத்துவதுடன் அனைவரையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சிக்கும் உதவிகரமாக அமைகிறது.

நாடு தழுவிய கடலோர பாதுகாப்பு பயிற்சியான 'சி விஜில்-26' நவம்பர் 11 முதல் 19-ம் தேதி வரை நடைபெறுகிறது

சென்னை – 12 நவம்பர், 2026 இந்திய கடற்படையின் ஒருங்கிணைப்புடன் நாடு தழுவிய 5-வது கடலோர பாதுகாப்பு பயிற்சியான 'சி விஜில்-26' நவம்பர் 11 முதல் 19-ம் தேதி வரை நடைபெறுகிறது. இப்பயிற்சி இரண்டு கட்டங்களாக நடத்தப்படும். முதல் கட்டமாக 2026 நவம்பர் 12 முதல் 17-ம் தேதி வரை கடலோர பாதுகாப்பு, தயார்நிலை மதிப்பீடு நடைபெறும். அதன்பிறகு நவம்பர் 18, 19-ம் தேதிகளில் கடல் சார்ந்த பயிற்சி கட்டம் நடைபெறும்.

26/11 மும்பை பயங்கரவாத தாக்குதலுக்கு பிறகு கடல்சார் பாதுகாப்பை வலுப்படுத்த மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை மதிப்பீடு செய்யும் வகையில் 2018-ம் ஆண்டு சி விஜில் பயிற்சி ஏற்படுத்தப்பட்டது. சி விஜில்-26 பயிற்சியில் இந்தியாவின் அனைத்து கடற்கரை பகுதி, பிரத்யேக பொருளாதார மண்டலத்தில் மேற்கொள்ளப்படும்.

இதில் அனைத்து கடலோர மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், மீனவ சமூகத்தினர் உள்ளிட்ட கடல்சார் தொடர்புடைய அனைவரும் பங்கேற்க உள்ளனர். இப்பயிற்சியில் இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல்படை, கடலோர பாதுகாப்பு காவல்துறை, சுங்கத்துறை, இதர கடல்சார் அமைப்புகளின் வளங்கள் பயன்படுத்தப்படும். அத்துடன், மத்திய அரசின் பாதுகாப்பு அமைச்சகம், உள்துறை அமைச்சகம், துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, மற்றும் நீர்வழிகள் அமைச்சகம், பெட்ரோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகம், மீன் வளம், கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வள அமைச்சகம் ஆகியவற்றுடன் மத்திய அரசின் இதர அமைப்புகள், கடலோர மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் நிர்வாகங்களும் இப்பயிற்சியை நடத்த ஒத்துழைக்கின்றன.

மாணவர்கள் தொழில்நுட்ப அறிவை வளர்த்துக்கொள்வதுடன் போதைப்பொருள் உள்ளிட்ட தீய பழக்கங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும்: குடியரசு துணைத்தலைவர்

சென்னை – 12 நவம்பர், 2026 மாணவர்கள் புதிய தொழில்நுட்பங்கள், அறிவியல் ஆராய்ச்சி போன்ற துறைகளில் தங்களது திறன்களை வளர்த்துக்கொள்வதுடன் போதைப்பொருள் உள்ளிட்ட தீய பழக்க வழக்கங்களிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்று குடியரசு துணைத்தலைவர் சி பி ராதாகிருஷ்ணன் வலியுறுத்தினார்.

தூத்துக்குடியில் வ உ சிதம்பரம் கல்லூரியின் 75-ம் ஆண்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். இந்தக் கல்லூரியும், ஆசிரியர்களும், தாம் சந்தித்த ஆளுமைகளும் மிகப் பெரிய பொறுப்புக்கான திறனை தாம் வளர்த்து கொள்வதற்கு உதவியதாக அவர் தெரிவித்தார்.

அவசரநிலைப் பிரகடனப்படுத்தப்பட்ட காலத்தை நினைவுகூர்ந்த அவர், அதற்கு எதிரான போராட்டத்தில் தாம் பங்கேற்றதைக் குறிப்பிட்டார். நாட்டின் ஒருமைப்பாட்டை வலியுறுத்திய அவர், ஒருங்கிணைந்த நாடாக இந்தியாவின் வலிமை தமிழ் கலாச்சாரம் உள்ளிட்ட பல்வேறு சமூகங்களின் மொழி, கலாச்சார அடையாளத்தை பாதுகாத்து வருவதாகக் குறிப்பிட்டார். மாணவர்கள் தாய்மொழி குறித்து பெருமிதம் கொள்வதுடன் தேசிய உணர்வையும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். பல்வேறு மொழிகளைக் கற்றுக்கொள்வதுடன் தமிழ் மொழியை உலக அளவில் கொண்டு செல்வதற்கும் உத்வேகம் அளித்தார்.

நாட்டைக் கட்டமைப்பதில் கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்த அவர், நாடு முழுவதும் உயர் கல்வி நிறுவனங்கள் அதிகரிக்கப்பட்டு வருவதை சுட்டிக்காட்டினார்.

முன்னதாக, கல்லூரி வளாகத்தில் இருந்த சுதந்திர போராட்ட வீர்ர் வ உ சிதம்பரம் பிள்ளையின் திருவுருவச் சிலைக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார். பின்னர், இந்தக் கல்லூரியின் 75 ஆண்டுகால நிறைவை குறிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ள நினைவு வளைவை அவர் திறந்து வைத்தார். 1975 முதல் 1978 வரை இந்தக் கல்லூரியில் பயின்றதை நினைவுகூர்ந்த அவர், தாம் பயின்ற வகுப்பறைக்குச் சென்று சக தோழர்களுடன் கலந்துரையாடினார்.

பாஸ்பேட், பொட்டாஷ் உரங்கள் மீதான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய விகிதங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல்

சென்னை – 12 நவம்பர், 2026 பாஸ்பேட், பொட்டாஷ் உரங்கள் மீதான ஊட்டச்சத்து அடிப்படையிலான மானிய விகிதங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவைக் குழு இன்று ஒப்புதல் அளித்துள்ளது. நடப்பு ரபி பருவத்திற்கான (01.10.2026 முதல் 31.03.2027 வரை) மானிய விகிதங்களுக்கு இந்த ஒப்புதல் பொருந்தும். இதற்கான பட்ஜெட் ஒதுக்கீடு ரூ.62,370.02 கோடியாகும். இது கடந்த ஆண்டு ரபி பருவத்திற்கான பட்ஜெட் ஒதுக்கீட்டைக் காட்டிலும் ரூ.24,417.73 கோடி கூடுதலாகும்.

இதன் மூலம் விவசாயிகளுக்கு உரங்கள் மானிய விலையிலும், மலிவாகவும் நியாயமான விலையில் கிடைப்பது உறுதி செய்யப்படும். சர்வதேச சந்தையில் உரங்கள், அதற்கான மூலப்பொருட்களின் விலைகளில் ஏற்பட்டுள்ள ஏற்றத்தாழ்வுகள் கருத்தில் கொண்டு பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களுக்கான மானிய விகிதங்கள் சீரமைக்கப்படும்.

டிஏபி, நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் போன்ற தாவர ஊட்டச்சத்துகளுக்கான உர வகைகள் உட்பட பாஸ்பேட், பொட்டாஷ் உரங்களுக்கான மானியங்கள் நடப்பு ரபி பருவத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட விகிதாச்சார அடிப்படையில் வழங்கப்படும். இதன் மூலம் விவசாயிகள் இந்த உரங்களை மலிவு விலையில் தடையின்றி பெறுவது உறுதி செய்யப்படும்.

அரசு உர உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள் மூலம் டிஏபி உள்ளிட்ட பாஸ்பேட், பொட்டாஷ் உரங்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்க வழி செய்கிறது. யூரியா, டிஏபி, எம்ஓபி, கந்தகம் போன்ற உரங்கள், வேளாண் இடுபொருள்களுக்கான சர்வதேச சந்தை விலையில் ஏற்பட்டுள்ள மாற்றங்களைக் கருத்தில் கொண்டு இதற்கான மானிய விகிதங்களுக்கு மத்திய அமைச்சரவைக் குழு ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஊட்டச்சத்து அடிப்படையிலான உர வகைகள் விவசாயிகளுக்கு குறித்த காலத்தில் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் உரங்களுக்கான மானிய விகிதங்கள் உட்பட பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது. இந்த உர மானியங்கள் மூலம் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் உரங்கள் கிடைக்க வகை செய்வதுடன் ரபி பருவ பயிர்களுக்காக அங்கீகரிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட விகிதாச்சாரங்களின் அடிப்படையில் உரம் உற்பத்தி செய்யும் நிறுவனங்களுக்கு இந்த மானியத் தொகை வழங்கப்படும்.

பிரதமர் கர்நாடகா, குஜராத் மாநிலங்களில் நவம்பர் 13, 14-ம் தேதிகளில் பயணம்

சென்னை – 12 நவம்பர், 2026 பிரதமர் நரேந்திர மோடி கர்நாடகா, குஜராத் மாநிலங்களில் நவம்பர் 13, 14-ம் தேதிகளில் பயணம் மேற்கொள்கிறார்.

காலை 10:45 மணியளவில் பிரசாந்தி குதிரத்தின் பொன்விழா கொண்டாட்டங்களில் பிரதமர் பங்கேற்கிறார். அப்போது அங்கு கூடியிருப்போர்களிடையே அவர் உரையாற்றவுள்ளார்.

பிற்பகல் 12:45 மணியளவில் தாவரக்கெரேவிலிருந்து பெங்களூரு ஐஐஎம் மெட்ரோ நிலையம் வரை மெட்ரோ சேவையை பிரதமர் தொடங்கி வைத்து பயணம் மேற்கொள்கிறார்.

1.15 மணியளவில் பெங்களூருவில் ரூ.15,600 கோடிக்கும் அதிக மதிப்பிலான வளர்ச்சி திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டி, முடிவடைந்த திட்டங்களை நாட்டுக்கு அர்ப்பணித்து உரையாற்றுகிறார்.

அதை தொடர்ந்து மைசூரு செல்லும் பிரதமர் மாலை 3:30 மணியளவில் பாரத் வன் பகுதியில் நடைபெறும் மரக்கன்று நடும் நிகழ்ச்சியில் பங்கேற்கிறார்.

மாலை 4:00 மணியளவில் மைசூருவில் உள்ள காஸ்மோஸ் வான்நோக்கி அரங்கை திறந்து வைத்து உரையாற்றுகிறார்.

நவம்பர் 14 அன்று குஜராத்தின் பனஸ்கந்தாவில் உள்ள அம்பாஜி கோவிலில் பிரதமர் தரிசனம் செய்கிறார். அம்பாஜி கோவில் மிகவும் போற்றக்கூடிய 51 சக்தி பீடங்களில் ஒன்றாகும்.

பெங்களூருவில் பிரதமர்: